## ரூ.50 ஆயிரம் கோடி அலைவரிசை முறைகேடு

# பி.எஸ்.என்.எல். தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரம் தொடங்கியது

பிஎஸ்என்எல் நிறுவனத்தில் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் தொழிற்சங்க அங்கீகாரத்திற்கான நான்காவது தேர்தல் ஜனவரி 21ல் நடைபெறுவதாக நிர்வாகம் அறிவித்துள்ள சூழலில் தேசிய தொலை தொடர்பு ஊழியர் சம்மேளனத்தின் தலைமையில் உருவாகியுள்ள பிஎஸ்என்எல் தொழிலாளர் கூட்டணி தனது தேர்தல் பிரச்சாரத்தை பெங்களூருவில் நவம்பர் 19ல் துவக்கியது.

சங்க அங்கீகார தேர்தலை சந்திக்க சம்மேளனம் அமைத்துள்ள இக்கூட்டணியில் ஒன்பது சங்கங்கள் இடம் பெற்றுள்ளன. எதிர் கூட்டணியில் மூன்று சங்கங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. எனவே தொழிலாளர் கூட்டணியின் வெற்றி பெங்களூருவில் உறுதியாகி விட்டது. பெங்களூருவில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டணியின் பிரச்சார துவக்க விழாவில் கர்நாடகா, தமிழ்நாடு, சென்னை தொலைபேசி, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 4500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றது எழுச்சிமிக்கதாக அமைந்தது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பவனில் நடைபெற்ற பிரம்மாண்டமான பிரச்சார துவக்க விழாவிற்கு சம்மேளனத்தின் அகில இந்திய செயலாளர் சி.கே. மதிவாணன் தலைமை ஏற்று வழிநடத்தினார். இதில் தேசிய தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வள்ளிநாயகம், எஸ்சிஎஸ்டி அமைப்பின் பொதுச் செயலாளர் முத்துகிருஷ்ணன், எம்ப்ளாயீஸ் காங்கிரஸ் அமைப்பின் பொதுச் செயலாளர் ராமசுந்தரம், ராஷ்ட்ரியா யூனியன் துணைத்தலைவர் சுதாகர சவுத்ரி பாட்டாளி தொழிற் சங்கத் தலைவர் மாதையன் உள்ளிட்டவர்கள் சிறப்புரையாற்றினர். இது தவிர கூட்டணியின் முக்கிய தலைவர்களான தாமஸ் ஜான், இஸ்லாம் அகமது, சந்திரசேகரன், சேஷாத்ரி, ஆண்டியப்பன் மற்றும் மாநிலச் செயலாளர்கள் ஆர்.வெங்கிடாசலம் (தமிழ்நாடு) மைக்கேல்(கேரளா) செங்கப்பா(கர்நாடகம்) ராஜ்மௌலி(ஆந்திரா), பி.விஜயராகவன் (சென்னை தொலைபேசி) ஜெயந்த் (கர்நாடகம்) ஆகியோரும் கருத்துரையாற்றினர்.

குறைவான போனஸ், பாரபட்சமான பதவி உயர்வுதிட்டம், எஸ்.சி.எஸ்.டி ஊழியருக்கான இடஒதுக்கீடு மறுப்பு பிஎஸ்என்எல் நிறுவனத்தில் பங்கு விற்பனைக்கு ஆதரவு, நஷ்டந்தரும் ஐடிஐ நிறுவனத்தை பிஎஸ்என்எல் நிறுவனத்துடன் இணைப்பதற்கு ஒப்புதல் போன்ற எதிர்மறையான அம்சங்களால் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட சங்கமான எம்ப்ளாயீஸ் யூனியன் ஊழியரின் எதிர்ப்புக்கு ஆளாகி அந்நியப்பட்டு நிற்கிறது. இதுதவிர தேர்தலில் போட்டியிடும் 14 சங்கங்களில் எட்டு சங்கங்களை ஒன்றிணைத்து மிகவும் வலுவான கூட்டணியை சம்மேளனம் உருவாக்கி உள்ளதால் எதிர்வரும் தேர்தலில் பிஎஸ்என்எல் தொழிலாளர் கூட்டணி வெற்றி பெறும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

நான்காண்டுகளாக அங்கீகாரத்தை வைத்திருக்கும் எம்ப்ளாயீஸ் யூனியன் நிறுவனத்தின் நலன்கள் மட்டுமில்லாது ஊழியர் நலனையும் பாதுகாத்திட தவறிவிட்டது. எந்த போராட்டத்தையும் உருப்படியாக நடத்தி கோரிக்கைகளை வென்று உடன்பாடு எதையும் போடாமல் நிர்வாகத்தின் வேண்டுகோள் மற்றும் அமைச்சரின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே அனைத்துப் போராட்டங்களையும் வாபஸ் பெற்று தொழிற்சங்க வரலாற்றில் சாதனை(!) புரிந்த சங்கமாக சரணாகதி சங்கமாக எம்ப்ளாயீஸ் யூனியன் மாறி விட்டதால் பெரும்பான்மையான ஊழியர்கள் அதற்கு எதிராக திரும்பி விட்டதில் வியப்பு ஏதும் இல்லை.

தற்போது சின்னஞ்சிறு திமுக ஆதரவு சங்கத்தை மட்டுமே நம்பி தேர்தல் களத்தில் குதித்துள்ள எம்ப்ளாயீஸ் யூனியனுக்கு நாடுநெடுக தோல்வி காத்திருப்பது உண்மை.

நாட்டையே உலுக்கி கொண்டிருக்கும் ரூ50 ஆயிரம் கோடி அலைவரிசை ஊழல் குறித்து அனைத்து தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் அமைச்சர் மீது புகார் கூறி விசாரணை கோரிய போது எம்ப்ளாயீஸ் யூனியன் பொதுச் செயலாளர் நம்பூதிரி அமைச்சருக்கு ஆதரவாக கடிதம் தந்தது ஊழியரை கொதிப்படைய செய்தது. திமுக தலைமையும் இந்த கடிதத்தை சாதுர்யமாக பயன்படுத்தி அமைச்சர் மீது மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் பிரகாஷ் காரத் சாட்டிய குற்றச்சாட்டுக்கு பதில் கூறியது. தனக்கு எதிராக ஊழியர் உணர்வு பெருமளவுக்கு திரும்பிவிட்டதை உணர்ந்த தோழர் நம்பூதிரி சில தினங்களுக்கு முன்பு திடீர் பல்டி அடித்து 2ஜி அலைவரிசை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்திருப்பதாகவும் எனவே இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என கோரிக்கை எழுப்பியது அவரை ஊழியர் மத்தியில் கேலிப் பொருளாக்கி விட்டது.

எப்படியாவது தேர்தலில் வெற்றிபெற்று அங்கீகாரத்தை தக்கவைத்துக் கொள்ள எம்ப்ளாயீஸ் யூனியன் நிர்வாகத்துடன் எத்தகைய சமரசத்திற்கும் தயாராகிவிட்டது. நிர்வாகமும் தனக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பொம்மை தொழிற்சங்கமாக எம்ப்ளாயீஸ் யூனியன் நான்காண்டுகளாக செயல்பட்டு வருவதால் அச்சங்கம் வெற்றி பெற அனைத்து உதவிகளையும் செய்ய தயாராகி விட்டது. எனவே தான் அனைத்து தார்மீக பண்புகளையும் மீறி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு அங்கீகார தேர்தலுக்கான அட்டவணை அறிவிக்கப் பட்ட பிறகு நியாயமின்றி எம்ப்ளாயீஸ் யூனியனுடன் அவசர அவசரமாக பதவி உயர்வு திட்டம் குறித்து உடன்பாடு கையெழுத்திட்டது. இதனை தேர்தலில் போட்டிப்போடும் பிற கட்சிகள் அனைத்தும் கடுமையாக எதிர்த்த பிறகும் நிர்வாகம் உடன்பாட்டை நடை முறைப்படுத்த செயல்படுவது எம்ப்ளாயீஸ் யூனியனுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் உள்ள நல்லுறவை(!) படம் பிடித்துக் காட்டுகிறது.

அடுத்த இரண்டு மாதங்களுக்கு தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்திடவும் கூட்டணி சார்பில் அனைத்து ஊழியரையும் நேரில் சந்தித்து தொழிலாளர் கூட்டணிக்கு ஆதரவு திரட்ட பெங்களூரு கூட்டம் தீர்மானித்தது.

பெங்களூருவிலிருந்து
**சி.கே.மதிவாணன்**